IITA

# அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
# International Institute of Tamil Arts

## தமிழ்க்கலைத் தேர்வு - 2021/2022 - பிரான்சு

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஏழு

(ஆற்றுகைத்தரம்)

**நேரம்: 210 நிமிடங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

## பகுதி ஒன்று

**பகுதி 1 இல் முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்கும், பகுதி 11 இல் முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

1. அ. ஆலயங்களை மையமாக வைத்தே எமது பரதக்கலை வளர்ச்சியடைந்துள்ளது. இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை விளக்குக. (15 புள்ளிகள்)

   ஆ. காளி தாண்டவம் ஆடிய சந்தர்ப்பத்தினையும் அதற்குரிய புராணக் கதையினையும் தருக. மேற்படி தாண்டவம் ஆடிய இடம், சபை என்பனவற்றையும் தருக. (10 புள்ளிகள்)

2. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   அ. பாடத்திட்டம்
   ஆ. ஒப்பனை
   இ. ஸ்ரோதோவகயதி
   ஈ. சிலப்பதிகாரம்
   உ. நட்டுவாங்கம் (15 புள்ளிகள்)

3. குச்சுப்புடி, ஒடிசி ஆகிய இரு நடனமரபுகளின் கலாசாரப்பின்னணி, இசை, ஒப்பனை, அணிசேர் இசைக்கருவிகள், ஆடல்முறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் ஒற்றுமை, வேற்றுமைகளை இனங்கண்டு விளக்குக. (15 புள்ளிகள்)

4. தென்னிந்தியாவில் பரதக்கலை மறுமலர்ச்சிக்குத் தொண்டாற்றிய கலைஞர்களையும், மறுமலர்ச்சியின் வளர்ச்சிப்படிகளையும் விளக்குக. (குறைந்தது மூன்று கலைஞர்கள்) (15 புள்ளிகள்)

(ம.ப.பா)

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு - 2021/2022 - பிரான்சு

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஏழு

(ஆற்றுகைத்தரம்)

**நேரம்: 210 நிமிடங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

## பகுதி இரண்டு

**முதலாவது வினா உட்பட மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**

1. நீவிர் கற்ற தோடயமங்களத்தின் 4வது கண்டிகையின் இராக, தாளத்தினைக் குறிப்பிட்டு, மேற்படி கண்டிகையில் அமையும் தீர்மானத்தினை தாளாங்கக் குறியீட்டுடன் எழுதி, அதன் சாகித்தியத்தின் கருத்தினையும் தருக. (15 புள்ளிகள்)

2. பரதக்கலையானது உடல், உள, ஆன்மீக வளர்ச்சிக்கு ஆற்றும் பங்கினை உமது அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்கக. (15 புள்ளிகள்)

3. குரு இலக்ஷணத்தில் குறிப்பிடப்படும் நடன ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமைக்கும் இன்றைய கால நடன ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமையையும் ஒப்பிட்டு விளக்குக. (15 புள்ளிகள்)

4. அண்மைக்காலமாக உலகில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலைகளினால் பரதம் கற்பிக்கும் ஆசிரியர்கள், பரதம் பயிலும் மாணவர்கள் முகநூலில் (Face Book) பதிவேற்றம் செய்யும் நடன ஆற்றுகைகள், செயற்பாடுகள் பற்றிய உமது சாதக, பாதகமான கருத்துகளைத் தருக. (15 புள்ளிகள்)